[1979 ஏப்ரல் 26

தேவாரத்திலிருந்து கேரளாவை இணைக்கும் சாலைத்திட்டம்.

* வினா எண். 837—திரு. பி. ராமதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தேவாரத்திலிருந்து - கேரளாவை இணைக்கும் சாகலூத்துமெட்டு சாலைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை துரிதப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை. எனினும், இப்பணி மாநில தொடர்பு மற்றும் பொருளாதார முதன்மைப் பணித் திட்டத்தில் ஆறாவது அய்ந்தாவது திட்டத்தின்கீழ் (1978-83) மாநில திட்டக்குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

நாகர்மேடு அருகே தடுப்பணை.

* வினா எண். 838—திரு. பொ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடஆற்காடு மாவட்டம் வந்தவாசி தொகுதியில் நாகர்மேடு என்னுமிடத்தில் உள்ள ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பணி மேற்கொள்ளப்பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. பொ. முனுசாமி : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், வந்தவாசி தொகுதியில், நாகர்மேடு என்னுமிடத்தில் தடுப்பு அணை கட்டினால், அங்குள்ள விவசாயிகள் பயனடைவார்கள். அதனால், உடனடியாக அந்த அணையைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நன்மையைக் கருதித்தான். சீக்கிரமாக நடைபெறுவதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.